भारतीय गैर न्यायिक

एक सौ रुपये

Rs. 100

रु. 100

ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

Rs.100/-

CR 016587

12.07.2022

எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி

V.மோகன்ராஜ்
ஸ்டாம்பு வெண்டர்
உரிமம் எண். 17419/C1/93
மேட்டூர் - 636401. சேலம் (DT).

# புரிந்துணர்வு ஒப்பந்தம்(MOU)

**புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்**

**புதுச்சேரி**

**மற்றும்**

**எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி**

**குமாரபாளையம்,நாமக்கல்(மாவட்டம்)**

**இரு நிறுவனங்களுக்கிடையேயான**

**புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)**

R. Vineet
25/09/2022
Principal
Excel College for Commerce and Science
Komarapalayam - 637 303

நிறுவுநர்
புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்
எண். 4, காமராசர் தெரு, வி.பி.சிங் நகர்
சண்முகாபுரம், புதுச்சேரி - 605 009
கைப்பேசி : 9894755985

புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம், புதுச்சேரி, நாமக்கல்(மாவட்டம்) குமாரபாளையம் எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைக்கும் இடையே கல்வி, ஆராய்ச்சிசார் பரிமாற்றங்கள், மேம்பாட்டுப் பணிகள் செய்துகொள்வது தொடர்பாக புரிந்துணர்வு அடிப்படையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பெறுகிறது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் செயல்பாடுகள் இரு நிறுவனங்களின் தலைவர்களும் அவரவர் சார்பில் நியமிக்கப்பெறும் ஆய்வுத்திறனையும் பட்டறிவுடன் கூடிய ஒருங்கிணைப்பாளரையும் சார்ந்தவையாகும்.

ஒப்பந்தத்தினைக் கொண்டு இரு நிறுவனங்களையும் வேறு எந்த அலுவல் நிலையிலான வேண்டுகோளினையும் கேட்கக்கூடாது.

இரு நிறுவனங்களின் அவ்வப்போதைய நிதிநிலையைப் பொறுத்து நிதிசார் தேவைகளை முறையாகப் பேசிப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

ஒப்பந்தம் குறித்து ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்பெறும். ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்களும் இக்குறிப்பிட்ட பொருண்மைகளில் வெவ்வேறு தளங்களில் தனித்தனியே ஈடுபட்டுக் கொள்ளவும் செயல்படவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்து தருகின்றது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அறிவு மேம்பாட்டிற்கு மட்டும் ஏற்படுத்திக் கொள்ளப் பெறுகின்றது. வணிக நோக்கில் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இரு நிறுவனங்களின் பெயர்களை இருவரும் பயன்படுத்துவதற்கு முன்பாக விரிவாக கலந்தாய்வு செய்து தொடர்பு கொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்த காலத்தில் இரு நிறுவனங்களும் நடத்த திட்டமிடப்பெறும் நிகழ்வுகள், கருத்தரங்குகள் , கருத்தரங்க முன்மொழிவுகள் , அழைப்பிதழ்கள், பதாகை (flex) , குறிப்பேடு, கோப்புகள் முதலான அனைத்து ஏற்பாடுகளும் விரிவான, வெளிப்படையான, முறையான கலந்தாய்வுகளின் மூலமாகச் செய்து கொள்ளப்பட வேண்டியவை.

இரு நிறுவனங்களும் முன்னரே தீர்மானித்த செயல்பாடுகளைச் செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கையாக வெளியிடும் பொழுது, இருவரும் எழுத்துவடிவில் இசைவு பெற்றே வெளியிட வேண்டும்.

வரையறுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துறைகளின் ஆய்வுக் களங்களில் கீழ்க்காணும் பொதுத்தன்மையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பினை நல்குவது என ஒருமனதாகத் தீர்மானிக்கப் பெற்று இவ்வொப்பந்தம் உருவாக்கப் பெறுகிறது.

புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம் வாயிலாக கல்லூரி மாணவ, மாணவிகளின் படைப்பாக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலே பல்வேறு வகையிலான போட்டிகள், மொழிபெயர்ப்பு, சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் முதலான ஆய்வரங்கங்கள் , முத்தமிழ் போட்டிகள் , சிறப்பு சொற்பொழிவுகள் , கருத்தரங்குகள் , பயிலரங்குகள் , மாநாடுகள் , நூல்விமர்சனம் , புதிய படைப்பாளிகளின் நூல்களை வெளியிடுதல்,கவிதைப் போட்டிகளை உலக அளவில் நிகழ்த்துதல்,கவிஞர்கள்,அறிஞர்களின் பிறந்த,இறந்த தினங்களில் அவர்கள் குறித்த நிகழ்வுகளை நடத்துதல் , நாட்டுப்புறக் கலைகள் , அகழாய்வு, கல்வெட்டு, ஓலைச்சுவடிகள் , அறிவியல்தமிழ் வளர்ச்சி, அயல்நாட்டுத் தமிழ் , வெளிநாடுகளுடனான நிகழ்வுத் தொடர்பு, தமிழ்ச் சங்கங்களுடனான நிகழ்வுத் தொடர்பு, அருங்காட்சியகத்தை பார்வையிட மாணாக்கர்களை அழைத்துச் செல்லுதல் , பன்னாட்டு அடிப்படையில் பயிலரங்கம் நடத்துதல் , படைப்பாக்கத் திறன் போன்றவற்றை இரு நிறுவனங்களும் இணைந்து நடத்தத் திட்டமிடல்.

நிறுவுநர்
புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்
எண். 4, வாணராசர் தெரு, வி.பி.சிங் நகர்
சண்முகாபுரம், புதுச்சேரி - 605 009
கைப்பேசி : 9894755985

R. Vinit
25/09/2022
Principal
Excel College for Commerce and Science
Komarapalayam - 637 303

சான்றிதழ் படிப்பாக இதழியல், ஊடகவியல், நாட்டுப்புறக் கலைகள், தொல்லியல், சுற்றுலாவியல், சித்தமருத்துவம், கணினித்தமிழ், இணையவழி வாயிலாக ஆய்வுக்கட்டுரைகளை எழுதியும், வாசித்தும் மாணவர்கள் படைப்பாளுமையை வளர்த்துக்கொள்ளுதல். அறிவியல் சார்ந்த கலைச் சொற்கள் உருவாக்கல், தரப்படுத்துதல்.

செவ்வியல் மற்றும் தமிழ்ச் சார்ந்த ஆய்வுகளை இரு நிறுவனங்களும் சிறப்பு உதவித் திட்டத்திலும் (Special Assistance Programme- SAP) பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழாய்வுக் கட்டுரைகள் அடங்கிய ஆய்வுகள் ISSN எண்ணுடன் ஆய்விதழ் வெளியிடல்.

முனைவர் பட்ட ஆய்வுச் சுருக்கத்தினை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடல்.

எல்லாவிதமான போட்டித் தேர்வுகளிலும் தமிழே பிரதானமாக இடம்பெற்றுள்ளது. ஆகையால் பள்ளிக் கல்லூரிகளில் ஆசிரியர்த் தேர்வுப் பயிற்சி, மத்திய மாநிலப் பணிகளில் வேலைவாய்ப்பு, செய்தி வாசிப்பு, நிகழ்ச்சித் தொகுப்பு, ஊடகப் பணி வாய்ப்பு, செய்தித்தாள் துறைப் பணிகள், தட்டச்சுப் பணி வாய்ப்பு, இந்து சமய அறநிலையத்துறை, தொல்லியல் சார்ந்த வேலை வாய்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்திக்கொள்ளுதல்.

மேற்கண்ட ஒப்பந்தம் மூலம் இணைந்து உருவாக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகள், தொகுப்பு நூல்கள், குறுந்தகடுகள் முதலான வெளியீடுகளை இரு நிறுவனங்களும் இணைந்து வெளியிடுதல்.

அறிவுசார் கட்டமைப்பு நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் அகத்தூண்டலுக்கும் துலங்களுக்கும் மட்டுமே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பெறுகின்றது.

வேறு ஏதேனும் புதிய நடைமுறைகளை செயல்படுத்தவேண்டுமெனில் இருநிறுவனங்களும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கலந்து ஆலோசனை செய்து, பின் எழுதி நடத்திக் கொள்ளலாம். இருநிறுவனங்களும் இணைந்து நிகழ்த்தும் தத்தம் செயல்பாடுகளைத் தனித்தனியே ஆவணப்படுத்திக்கொள்ளலாம்.

ஒவ்வொரு நிறுவனமும் அடுத்த நிறுவனங்களிடமிருந்து பெற்ற தகவல்களை மந்தண(இரகசிய) அறிக்கைகளாக கருதிப் பாதுகாக்க வேண்டும்.

எழுத்து வடிவிலான, ஆவண வடிவிலான முன்வரைவுகள் இரு நிறுவனங்களும் நன்கு சோதிக்கப் பெற்றே பரிமாற்றம் செய்துகொள்ளப்படுகின்றன. அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2027 வரை ஆகிய ஐந்து ஆண்டுகளுக்கு இவ்வொப்பந்தம் நடைமுறையில் இருக்கும்.

**தேமதுரத் தமிழ் முழக்கம்! உலகெல்லாம் செழிக்கச் செய்வோம்!**

25/9/2022
**நிறுவநர்**
புதுச்சேரி படைப்பாளர் இயக்கம்,
புதுச்சேரி.
புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்
எண். 4, காமராசர் தெரு, வி.பி.சிங் நகர்
சண்முகாபுரம், புதுச்சேரி - 605 009
கைப்பேசி : 9894755985

நாள்: 25.09.2022

இடம்: புதுச்சேரி.

25/09/2022
**முதல்வர்**
எக்ஸல் வணிகவியல் மற்றும்
அறிவியல் கல்லூரி, குமாரபாளையம்.

Principal
Excel College for Commerce and Science
Komarapalayam - 637 303.

**சாட்சிகள்**

1. புதுவை. தமிழ்நெஞ்சன்
தலைவர்
புதுச்சேரி படைப்பாளர் இயக்கம்.

2. சு.சங்கர்
செயலாளர்
புதுச்சேரி படைப்பாளர் இயக்கம்.

**சாட்சிகள்**

1. தமிழ்த்துறைத் தலைவர் ,
எக்ஸல் வணிகவியல் மற்றும்
அறிவியல் கல்லூரி, குமாரபாளையம்.

2. உதவிப்பேராசிரியர் ,
எக்ஸல் வணிகவியல் மற்றும்
அறிவியல் கல்லூரி, குமாரபாளையம்.